IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
OS.No.-56/2018

DEPOSITION OF WITNESS – PW 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தவசி | தாலுகா | உசிலம்பட்டி |
| தகப்பனார் பெயர் | மாயாண்டித்தேவர் | ஊர் | விக்கிரமங்கலம் |
| தொழில் | விவசாயம் | மதம் | இந்து |
| வயது | 48 | | |

Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 9.3.2026 in accordance with the provisions of Act XX141.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே. கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை | வரிசை எண் |
|---|---|---|---|---|
| 1 | 18.04.2017 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் | வா.சா.ஆ.1 |
| 2 | --- | ஒப்புதல் அட்டை (எண்ணம் 2) | அசல் | வா.சா.ஆ.2 |
| 3 | 18.01.1972 | கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.3 |
| 4 | 01.09.2009 | தானசெட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.4 |
| 5 | 15.12.2016 | 10 (1) பட்டா | கணினி நகல் | வா.சா.ஆ.5 |

<u>**1,2,5பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. எனது தாயார் பெயர் பேச்சியம்மாள் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனது தாயாரின் தாயார் பெயர் கழுவாயி என்றால் சரிதான். எனது பாட்டிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1.கழுவத்தேவர் 2. பேச்சியம்மாள் 3. மொக்கராஜ் 4.பஞ்சவர்ணம் ஆகிய 4 பிள்ளைகள் ஆவார்கள்.

2. மேற்படி 4பேருக்கும் திருமணம் முடிந்து பிள்ளைகள் உள்ளது என்றால் மொக்கராஜ் தவிர மற்றவர்களுக்கு வாரிசு உண்டு. எனது தாயார் பேச்சியம்மாளுக்கு கண்பார்வை தெரியாது என்றால் சுமாராக தெரியும், தற்போது தெரியாது. நான் எத்தனை இலக்கச் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2இலக்கச் சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. மேற்படி 2இலக்கச் சொத்துக்களும் கிரையச்சொத்து என்றால் சரியல்ல, பூர்வீக சொத்தாகும். மேற்படி பூர்வீகச் சொத்து என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தானசெட்டில்மெண்ட் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணம் எனது தாயாரின் தாயார் கழுவாயி அவர்கள் 1972ல் கிரையமாக வாங்கிய ஆவணம் என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்துள்ள 5ஆவணங்களில் எனது தாயாரின் தாயார் கழுவாயி அவர்களுக்கு பூர்வீகமான பாத்தியப்பட்ட சொத்திற்கான ஆவணம் எது என்றால் வா.சா.ஆ.4 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பூர்வீகச் சொத்திற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பூர்வீகச் சொத்திற்கான ஆவணம் நான் தாக்கல் செய்துள்ளதாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. சொத்து விபரத்தில் கூறியுள்ள முதலாவது சொத்தான சர்வே எண் 37/6A1ல் உள்ள 61 செண்டை கடந்த 26.6.2000ல் பாண்டியராஜன் என்பவருக்கு மேற்படி வாதியின் தாயார் கழுவாயி அம்மாள் கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி பாண்டியராஜனை தரப்பினராக வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

6. பாண்டியராஜன் என்பவர் சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1வது இலக்கச் சொத்தினை பலபிளாட்டுகளாக பிரித்து 23.7.2002ல் சுபத்திராதேவி என்பவருக்கும், 20.3.2002ல் பிளாட் எண் 145ஐ சண்முகவேல் என்பவருக்கும் பிளாட் எண் 144ஐ 29.8.2002ல் மீனாட்சி சுந்தரம் என்பவருக்கும் விற்பனை செய்து விட்டனர் என்றால் எனக்கு தெரியாது. 1வது இலக்கச் சொத்தான கழுவாயி அம்மாள் வாங்கிய சொத்தினை யாருக்கும் விற்பனை செய்யலாம் என்றால் சரிதான்.

7. மேற்படி 1வது இலக்கச் சொத்தை பொறுத்து எனக்கு பாகம் வேண்டாம் என்றால் கிரையச்சொத்தினை பொறுத்து நான் பாகம் கேட்கவில்லை, பூர்வீக சொத்திற்கு பாகம் கேட்டுள்ளேன். பூர்வீகச் சொத்திற்கான சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 37/Aல் செண்டு 65 ஆகும். மேற்படி பூர்வீக சொத்து எவ்வாறு உள்ளது என்றால் தரிசு நிலமாக உள்ளது. மேற்படி பூர்வீகச் சொத்தினைத்தான் வழக்கில் 2வது இலக்கமாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான்.

8. வழக்கு தாக்கல் செய்யும்போது என்தாயாருக்கு கண்தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு நடத்தும் விபரம் எனது தாயாருக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது தாத்தா கழுவத்தேவர் பெயரில் உள்ள பட்டா இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

வழக்குச் சொத்து பூர்வீகச் சொத்து இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. கழுவாயி அம்மாள் கிரையம் வாங்கிய சொத்தைத்தான் மகனுக்கும், பேரனுக்கும் தானமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் பாகம் கேட்பதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

( 1,2,5பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.09 17:30:05 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
திருமங்கலம்.